# சாவகச்சேரி இந்துக்கல்லூரி
## பழைய மாணவர், ஆசிரியர் சங்கம்
( ஐக்கிய இராச்சியம் )

# Chavakachcheri Hindu College
## Old Students, Teachers Association
( UK )

15th Cultural Event

**28th March 2009**

Greenford Town Hall
Greenford
London

www.chcosta.com

# CCR INSURANCE BROKERS LTD





**Household**

**Own a Property that's rented to others**

**Whether it's rented by Professionals, Student or DHSS**

**Owner - Occupied Building & Contents**





## Commercial Insurance

**Shops**
**Office**
**Restaurants / Cafes**
**Clubs**
**Liability**
**Building**
**Manufacturing**
**Distributors**
**Commercial Vehicle**
**Motor Trade**
**Moor Fleet & More**




96 Sudbury Avenue
Wembley
Middx HA0 3BG

C.C.RAVEENDRAN
020 8904 9686
079 5634 5004

# கல்லூரி கீதம்

**இராகம் : தர்பார்    தாளம் :ரூபகம்**

### பல்லவி

வாழ்க இந்துக்கல்லூரி வாழ்கவே – வாழ்கவே
வாழ்க இந்துக்கல்லூரி வாழ்கவே – வாழ்கவே

### அனுபல்லவி

வாழ்க நம்திரு வாழ்க நம்கலை
நாளும் நன்மையும் உண்மையும் ஓங்கவே – வாழ்க

### சரணம்

அறமும் அன்பும் அருளும் தழைக்க
ஆன்ம நேய உணர்வு செழிக்க
உறவு கனிந்தே உயர்வு நிலைக்க
உலகில் புகழும் அறிவும் தரிக்க – வாழ்க

### ஆக்கியோன்

அமரர் இசையரசு எஸ்.எஸ். இரத்தினம்
முன்னாள் சங்கீத ஆசிரியர்
சாவகச்சேரி இந்துக்கல்லூரி

Lotus
Financial Consultants

# Lotus Financial Consultants

**Lotus Financial consultants is Independent.**

**we have the choice from whole market of Lenders and product Providers**

*Mortgages
*Remortgages
*Commercial loans
*Life & Crictical illness Protection
*Retirement Planning
*Investment Advise
*Building & contents Insurance
*Commercial Insurance
*Travel Insurance
*Medical Insurance

**For the best advice for your individual circumstances please contact**

**Siva-07904330557 Skantha-07958507009**
**Tel: 02089044545 Fax:02089049777**
**www.lotusfinancialconsultants.com**
**mail:enquries@lotusfinancialconsultants.com**

**Lotus Group**
**227 Preston Road Wembley Middlesex HA9 8NF**

Providing a quality service to your needs with minimal cost is our goal.
Lotus Financial Consultants Ltd is Authorised and Regulated by Financial services Authority
Your home may be repossessed if you do not keep up repayments on your mortgage

# தலைவரின் வாழ்த்துச் செய்தி



யாழ் சாவகச்சேரி இந்துக்கல்லூரி பழைய மாணவர் ஆசிரியர் சங்கத்தின் 15வது ஆண்டுவிழாவில் கலந்து சிறப்பிக்கும் இந்துவின் மைந்தர்களையும், உறவினர்களையும், நலன் விரும்பிகளையும் நண்பர்களையும் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவர் என்ற முறையிலும் தலைவர் என்றமுறையிலும் சந்திப்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

எமது சங்கம் 1995இல் மிகக்குறைந்த அங்கத்தவர்களுடன் ஆரம்பித்து இன்று 160ற்கு மேற்பட்ட ஆயுட்கால உறுப்பினர்களுடன் சிறப்பாக இயங்குவதற்கு காரணம் எமது அங்கத்தவர்களின் ஒற்றுமையும் அயராத கடின உழைப்பும் இலண்டனில் வாழும் புலம்பெயர் தென்மராட்சி மக்களின் தளராத பங்களிப்பும் எனின் மிகையாகாது.

எமது சங்கம் கல்லூரியின் வளர்ச்சியையே நோக்காகக் கொண்டு செயல்பட்டாலும் இங்குள்ள இந்துவின் மைந்தர்களிடையே ஒரு சகோதர பிணைப்பை ஏற்படுத்தி எல்லாவிதமான நிகழ்வுகளிலும் பங்கெடுத்து வருவது சிறப்பம்சமாக விளங்குகின்றது.

எமது சங்கம் கடந்த 15வருடங்களில் எமது கல்லூரித்தாய்க்கு பலவழிகளிலும் உதவி செய்து வந்திருக்கின்றது. அவற்றுள் காணி விஸ்தரிப்பு, மக்கள் இடப்பெயர்வின் போது பாதிக்கப்பட்ட கட்டிடங்களின் புனரமைப்பு வேலைகள், தளபாட கொள்வனவு, கணணிக் கொள்வனவு, தற்காலிக ஆங்கில ஆசிரியர்களுக்கான வேதனம், விளையாட்டு மைதான புனரமைப்பு, ஆரம்ப பாடசாலைக்கான காணிக் கொள்வனவு என்பன முக்கியமானவையாகும்.

இந்த வருடம் "வசதியற்ற மாணவருக்கு உயர்கல்வி பெறும் வாய்ப்பிற்கு கடனுதவி" என்ற தாரக மந்திரத்துடன் செயல்பட்டு வருகின்றோம். உங்கள் தாராளமான பங்களிப்பு எமது திட்டத்தை வெற்றி பெற செய்யும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. இறுதியாக இன்று சமூகம்தந்துள்ள அனைத்து அன்பு உள்ளங்களிற்கும் வாழ்த்து கூறி எனது செய்தியை நிறைவு செய்கின்றேன்.

**நன்றி**

ச. கிருஷ்ணமூர்த்தி
தலைவர்
சா.இ.ப.மா. சங்கம் – ஐக்கியராச்சியம்.


# IDEAL DIGITAL LAB

## A to Z Photographic Services

383 Rayners Lane

*Arangetram - Wedding - Birthday and all other social events
* We are here to capture your sweet memories and make them Beautiful you to keep and remember again and again

* Print Processing from any source
* Enlargements - any size(Gloss,Matt,Metallic)
* Beautiful Albums
* Decorative Frames
* Studio Photo (family Portrait,Modeling)
* Printing service for Professional Photographers
* Invitation cards, Business cards and more
*Photo restoration (Specialists)
* Laminating, Board Mount and canvas print
* Whatever Your need please ring once to us





*High Quality Professional Digital Albums
*For your Demand and Needs
* Choose the one you like from Hundreds



New Photographers and Students are Welcome

*உங்கள் படங்கள் பழுதாகியிருந்தாலோ.. தரங்குறைவாக இருந்தாலோ..கவலையை விட்டு எங்களிடம் எடுத்துவாருங்கள்.. புதிய தொழில்நுட்பம, கணணி உதவியுடன் மிக அழகாக திருத்தி தரமுடியும்.உங்கள் பொன்னான நேரத்தை ஒதுக்கி ஒருதடவை வந்து பாருங்கள்.

# 0208 429 2286
# 07830 181 946

krsiva@btintenet.com
idealgraphic@hotmail.co.uk



Ruban

## அமரர் அதிபர் வெற்றிவேலு அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்த போது (13-04.2002)



பழைய மாணவர்களுடன்

## அமரர் அதிபர் க. சந்திரசேகரா அவர்கள் 12வது கலைநிகழ்வில் கலந்து சிறப்பித்த போது (15-04.2006)



சங்க முக்கிய உறுப்பினர்களுக்கு ஞாபகப்பரிசு கொடுத்து கௌரவிக்கிறார்.

# Selva & Co

## Solicitors

## ADMINISTRATORS OF OATHS



***WE SPECIALISE IN:***

- *IMMIGRATION*
- *TRAFFIC OFFENSES*
- *CRIME*
- *MATRIMONIAL*
- *CONVEYANCING*
- *STATE BENEFITS*

**S. Selva**
*Solicitor*

**203, Kilburn High Road, Kilburn**
**London NW6 7HY**

**Tel: 020 7328 3330 Fax: 020 7328 3339**
**Mobile: 07956 341 215**

'Over a Decade of trust'

# GLENMORE



*Sales*
*Lettings*
*Management*
*Commercial*

எம்மவர்களின் தேவையே எமது சேவை,
கண்கண்ட உண்மை நமது சேவையின் தரம்,
லண்டன் முழுவதும் விரியும் நம் சேவையின் தரம்,
நாம் உங்கள் வசதி கருதி உங்களுக்காக பல
கிளைகள் ஸ்தாபித்துள்ளோம்.

விடுகள், கடைகள் விற்பதற்கும், வாங்குவதற்கும்,
வாடைக்கு விடுவதற்கும் எடுப்பதற்கும் சகல
வசதிகளும் செய்துதர காத்திருக்கிறோம்.

எமது ஸ்தாபனத்திற்கு
ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்

FindaProperty.com

NAEA Estate Agents
Ombudsman Scheme
NAEA

810 Harrow Road
Wembley, Middlesex
HAO 3EL
Tel: 020 8904 5040
Fax:020 8904 5220

492 Harrow Road
London W9 3QA
Tel: 020 8969 9995
Fax: 020 8969 9994

53 High Street, Acton
London W3 6ND
Tel: 020 8993 8807
Fax: 020 8993 8732

10 Glentworth Street
London NW1 5PG
Tel: 020 7487 5335
Fax: 020 7487 5665

Glenmore Commercial
10 Glentworth Street
London NW1 5 PG
Tel: 020 7487 5663
Fax: 020 7487 5665

## GM MORTGAGE SERVICES LTD

Mortgage | Business loans | Insurance
810a Harrow Road
Wembley, Middlesex
HAO 3EL
Tel: 020 8908 2514
Fax: 020 8908 6394

'GM Mortgage Services LTD is authorised and regulated by financial services authority'

"Your home may be repossesed if you don't keep up repayment on your Mortgage

WE LEAD THE REST FOLLOWS

info@glenmoreproperties.co.uk | www.glenmoreproperties.co.uk

# சேவைதான் உன்பணி



அகவை உனக்கு இவ்வாண்டு ஐ மூன்று!
அளப்பெரிய சேவைக்கு உன்பணி ஒரு சான்று!
அகத்தில் உன்புகழ் ஆல... போன்று!
தழைக்க வேண்டும் சிறப்பாக எஞ்ஞான்று (ம்)!

கல்லூரி எமக்கு கலங்கரை விளக்கு!
அவ்விளக்கதி ஒளிதர சான்றாக நீ விளக்கு!
சேவை தான் உன்பணி என்று நீ முழங்கு!
கல்லூரி உயர்ந்திட சாட்சியாய் நீ இலக்கு!

கல்வி எம்மை கரையேற்றும் தோணி!
கரையேற்றும் துடுப்பாம் அதில் எம் எழுத்தாணி!
ஏழையும் எழுத்தாணி எடுத்திட உதவுநீ!
எழுத்தறிவிக்கும் எம் கல்லூரி சிறந்திட வழிசெய்நீ!

அறிவு என்பது கரைகாணா ஏரி!
அறிவைத் தேக்கிட அணையாகும் ஒருகல்லூரி!
உன்பணி தொடர்ந்து உயர்ந்திடும் எம் கல்லூரி!
எம்கல்லூரி சிறந்திட புகழ்காணும் சாவகச்சேரி!

**ஆக்கம்: – செல்வி பிறேமலதா பஞ்சாட்சரம்**
**சட்டத்தரணி**
**பழைய மாணவி சா.இந்து**

# Courtney Smith & Co
# Solicitors

**WE SPEAK TAMIL, SINHALESE, HINDI, GUJARATI, & PUNJABI**

## We offer quality approved
## & dedicated service in the following areas

- *Conveyancing
    - ★ Residential
    - ★ Commercial
- * Landlord & Tenant
- * Wills & Probates
- * Litigation & Debt Recovery
- * Family
- * Personal Injury
- * Intellectual Property
- * Immigration
    - Work Permits
    - Student /Medical Treatment / Working Holiday Visas
    - HSMP
    - Nationality & Sponsorship
    - Tribunal Appeals (Bail an Judicial Review)

உங்கள் அனைத்துவிதமான சட்ட ஆலோசனைகளுக்கும்

நாடவேண்டிய சிறந்த இடம்

For an intial appoinment / discussion phone

**020 8868 7636**

**ASK FOR SUMITH / ARUL/ THAKAR**

**Fax: 020 8866 2112**

**2 Village Way East, Rayners Lane HA2 7LU**

# CB Motors

## All Types of Repairs For Any Cars Including

Body Work
Electical Work
Accident Repairs
MOT Arrangements

5 வருடங்களுக்குட்பட்ட சகல விதமான மோட்டார் வாகனங்களை
விற்கவும் வாங்கவும் தகுந்த இடம்

**தமிழிலே பேசி உங்கள்**
**பிரச்சனைகளைத் தீர்த்துக்கொள்ளலாம்**




Arch No 45
Roxeth Green Avenue
South Harrow
Middlesex
HA2 8AA

Bala & Brothers
Tel: 020 8423 9984
Fax: 020 8423 9903

# பிரதமவிருந்தினரின் வாழ்த்துச் செய்தி



சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் ஆசிரியர் சங்க ஐக்கிய இராச்சியக் கிளையினரால் நடாத்தப்படும் பதினைந்தாவது ஆண்டு நினைவு விழாவில் பங்கேற்கும் அனைவருக்கும் என் அன்பான நல்வாழ்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தென்மராட்சி மக்களின் நல்வாழ்விலும் கல்வி முன்னேற்றத்திலும் சா. இந்துக்கல்லூரியின் பங்கு மிக பெரியது, மிகப்பலர் இன்று உலகெல்லாம் பரந்து நல்ல நிலையில் இருப்பது மிகவும் பெருமைபட வேண்டிய தொன்று. இந்நிலையில் இவ்வாறு முன்னெடுக்கப்படும் விழாவானது புலம் பெயர்ந்த பின்னரும் எம்நிலம் சார்ந்த பற்றுதலை வளர்ப்பதோடு எமது இளம் சந்ததியினரைத் தாயகத்துடன் இணைத்து வைக்கும் பாலமாகவும் விளங்குகிறது.


இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் ஆசிரியர் சங்கத்தினரின் கல்லூரி சார்ந்த பங்களிப்பு மகத்தானதும் பாராட்ட வேண்டியதுமாகும். பல அன்பர்களால் வழங்கப்படும் நிதி உதவி கல்லூரியின் விஸ்தரிப்புக்கும் அதன் வளஅதிகரிப்புக்கும் மட்டுமின்றி கல்விசார் நடவடிக்கைகளுக்கும் பயன் படுத்தப்படுகிறது. அதேவேளை இவ்விழாவின் கலைநிகழ்வுகளால் எமது மொழி, இன கலாச்சார அடையாளங்கள் வலு பெறுகின்றன அவை அழிவடையாது பாதுகாக்கப்பட்டு அடுத்த சந்ததிக்கும் கடத்தப்படுகின்றன.

நாம் கற்றதும் பெற்றதுமான நல்லனுபவங்களை எமது வருங்கால சந்ததியினருக்கு நல்வழியில் ஊட்டி விட வேண்டியது எமது தலையாய கடமையாகும். இவ்விழாவை முன்னெடுப்பதன் மூலம் தமிழர்களாகிய எமக்கென்றொரு சுய அடையாளத்தை எதிர்காலத்துக்கு இட்டுச் செல்கின்ற மகத்தான பணியை ஆற்றும் பழைய மாணவர் ஆசிரியர் சங்கத்துக்கும் கலைவிருந்து நல்கும் இளையோருக்கும் என் மனங்கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இக் கல்லூரி எனக்கும் என் சகோதரசகோதரிகளுக்கும் நல்ல முறையில் கல்வியறிவினை ஊட்டி வாழும் வழிகளை வகுத்துத் தந்ததை இக்கணத்தில் நன்றியுடன் நினைவு கூருகின்றேன். புலம் பெயர்ந்து வாழும் எமது பிள்ளைகளுக்குக் கிடைக்கக் கூடிய விஞ்ஞான, தொழினுட்ப ரீதியிலான கல்வி வழங்கல் வசதிகள் எண்ணற்றவை அவற்றை எம்மால் இயலுமானவரையில் நாம் கற்ற கல்லூரி பெற ஆவன செய்தல் வேண்டும். நாம் பிறந்து வளர்ந்த தாய் மண் செழிக்கவும், நம்மை கல்வி தந்து வாழ்வித்த கல்லூரி வளம் பெற எம்மால் இயன்ற நற்பணிகளை முன்னெடுப்போம்.

யாழ் சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் ஆசிரியர் சங்க ஐக்கிய இராச்சியக் கிளையினரின் மகத்தான பணிகளைப் பாராட்டும் அதேவேளை அவர்களின் அற்புதமான உதவிக்கரங்கள் மென்மேலும் வலுப்பெற வாழ்த்தி விடை பெறுகின்றேன்.


**Dr. திருமதி சீதாலட்சுமி முருகேஸ்வரன்**
**பழையமாணவி (1969-1974)**

















# 1995 to 2001





# DO
# BE GOOD
# SEE
















# 2002 to 2008




நாடுக
நலமே புரிக
ஒளிர்க



# New Light

155 Greenford Road, Sudbury Hill,
Harrow, HA1 3QN . Tel: 020 8422 1118

Western Union ஊடாக உலகின் எப்பாகத்திலுமுள்ள உங்கள் உறவுகளிற்கு பணம் அனுப்ப விரும்புகின்றீர்களா? (Money Transfer)

உங்கள் கைத்தொலைபேசி தொழில் நுட்ப கோளாறு காரணமாக இயங்க மறுக்கின்றதா? (Mobile Phone Repairs)

உங்களுடைய பெறுமதிமிக்க ஆவணங்களின் பிரதிகளை எடுக்க விரும்புகிறீர்களா? அல்லது உறவினர்களுக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்ப விரும்புகின்றீர்களா? (Photo Copy, Fax )

உலகின் எப்பாகத்தில் இருப்பவருடனும் மின்வலையூடாக கதைக்க விரும்புகின்றீர்களா? (Internet Cafe)

உங்கள் கணணிகள், கையடக்ககணணிகள் என்பனவற்றை திருத்த வேண்டுமா? அல்லது தரமுயத்த வேண்டுமா?
(PC, Laptop Repairs & up Grading)


நீங்கள் புதிதாக கணணிகள், கையடக்க கணணிகள் வாங்க விரும்புகின்றீர்களா? (PC, Laptop Sales)

**ஒரே கூரையின் கீழ் அனைத்து சேவைகளும்**


**" தமிழரால் தமிழில் தமிழருக்காக செய்யப்படும் தன்னிகரற்ற சேவை"**

தொடர்புகளுக்கு: – சங்கர் 020 8422 1118 / ரூபன் 079 5638 7386
Fax: 020 8422 1050

**Computer Systems & Components Sales
Upgrades - Repairs Internet & E-mail , Fax Service,
Type Setting / Printing Copying From Disk, Video
Editing Making DVD From Video Scanning Service**



# கௌரவ விருந்தினரின் வாழ்த்துச் செய்தி



தென்மராட்சியின் இதயமாக விளங்கும் யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் ஐக்கிய இராச்சிய பழைய மாணவர், ஆசிரியர் சங்கத்தின் 15வது ஆண்டு விழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

ஐக்கிய இராச்சிய பழைய மாணவர் ஆசிரியர் சங்கம் கால வரலாறு கொண்டதாக விளங்கி, கல்லூரியுடன் தனது இணைப்பினை இடையறாது கொண்டு கல்லூரியின் தேவைகளின் போதும், ஏற்பட்ட பல்வேறு அனர்த்தங்களின் போதெல்லாம் தங்களின் ஒத்துழைப்பினை வழங்கி கல்லூரி மீண்டும் புதுப்பொலிவு பெற்று கல்வியிலும், இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் சாதனைகள் காண்பதற்கு பல செயற்திட்டங்கள், நிதி உதவிகள் மூலமாக சேவையாற்றிவருவது கண்டு கல்லூரிச் சமூகம் நன்றியுணர்வுடன் பெருமை கொள்கின்றது.


இன்றைய நவீனயுகத்தில் முறையான கல்வியின்றேல் நிறைவான வாழ்வு என்பது சாத்தியமாகாத ஒன்றாகிவிட்டது. முறையான கல்விக்கு முறையான வளங்களின் தேவைகள் அவசியமாகும். கல்லூரி தனக்கான வளங்களைப் பெறுவதற்கும், நவீனத்துவம் அடையவும், எதிர் நோக்கும் சவால்களை இனங்கண்டு அனைவரும் ஒன்று சேர்ந்து திட்டமிட்டுச் செயற்படுவதன் மூலமே அதன் எதிர்காலம் மேலும் சிறப்படையும்.

எமது கல்லூரியின் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், இவற்றை உணர்ந்து புலம் பெயர்ந்து வாழும் நாடுகளிலெல்லாம் பழைய மாணவர் ஆசிரியர்களை ஒன்றிணைத்து சங்கம் அமைத்து செயற்பட்டு வருவது கண்டு இந்து அன்னை மனம் மகிழ்ந்து கொண்டிருக்கின்றாள். இந்து அன்னையை அலங்கரிக்கும் பழைய மாணவர்கள் ஆசிரியர்கள் அனைவரும் போற்றுவதற்குரியவர்களே!

கல்லூரியின் கல்விச் செயற்பாடுகள் நவீனத்துவ கல்வி நீரோட்டத்தில் மேலும் வளர்ச்சி பெறவும், உயர்ச்சி பெறவும் ஐக்கிய இராச்சிய பழைய மாணவர், ஆசிரியர் சங்கத்தின் சேவை மேலும் சிறப்பாக அமைய இறைவனைப்பிரார்த்தித்து எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**நன்றி**

க. பத்மகாந்தன்
முன்னாள் பிரிதி அதிபர் / பழைய மாணவன்
யாழ் சாவகச்சேரி இந்துக் கல்லூரி


KNC
SCHOOL OF MOTORING
தமிழரால் தமிழில் ஓட்டுனர் பயிற்சி
PASSPLUS
MOTORWAY LESSONS
MANUAL AND AUTOMATIC AVAILABLE
PASS PLUS
MSA
MOTOR SCHOOLS ASSOCIATION
DIA
உங்கள்
THEORY TEST AND HAZARD PERCEPTION
ஆகிய இரண்டும் தமிழில் கணனி மூலம்
பயிற்சி வழங்கப்படும்
PLEASE CONTACT RUBAN
020 8864 9329
079 5638 7386
KNCDriving@aol.com

# யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி

(தேசிய பாடசாலை)

# J/CHAVAKACHCHERI HINDU COLLEGE

**(NATIONAL SCHOOL)**

☎: 0212227640, 0602215189
**E-mail:chavahindu @ gmail.com**
**Principal :- Mr. A. Kailayapillai.**
B.A (Hons), PGDE, MEd, SLPS - I

**CHAVAKACHCHERI**
சாவகச்சேரி
06.03.2009

---



## *கல்லூரி முதல்வரின் வாழ்த்துரை*

சாவகச்சேரி இந்துக் கல்லூரி தனது நூற்று ஐந்தாவது ஆண்டில் தடம் எடுத்து வைத்துள்ள இவ்வருடத்தில் ஐக்கிய இராச்சியத்தில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி பழைய மாணவர், ஆசிரியர் சங்கம் நடாத்துகின்ற பதினைந்தாவது ஒன்று கூடலில் வெளியிடப்படும் இந்த சிறப்பு மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

கல்லூரியின் குரல் ஐக்கிய இராச்சியத்தில் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் மூலம் உரக்கக் கேட்கின்றது. மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் எமது தேசம் சிக்குண்டுள்ளது. எமது உறவுகள் நலமுடன் வாழவும், துயர் நீங்கவும் இம்மலரூடாக இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

புலம் பெயர்ந்து ஐக்கிய இராச்சியத்தில் வாழ்ந்தாலும் கல்லூரித் தாயின் மீதும், இங்குள்ள மாணவர்கள் மீதும் பற்றுள்ள தங்களின் உதவிகள் மறக்க முடியாதவை. தங்களின் உதவியால் பெறப்பட்ட காணியில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் முதன்மை ஆரம்ப பாடசாலையாக யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை இந்த வருடத்தில் மலரவுள்ளது. கட்டிடப் பணிகள் மிகத் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இப்பாடசாலை புதிய இடத்தில் வசதியாக இயங்குவதற்கு தங்கள் பழைய மாணவர் ஆசிரிய சங்கத்தின் பணி மகத்தானது.

சாவகச்சேரி இந்து உட்கட்டுமான விருத்தியை நோக்கி நிற்கின்றது. வகுப்பறைத் தேவைகள், வசதிகள் அடங்கிய நவீன கலையரங்கம், விளையாட்டுத்துறை அபிவிருத்தி போன்ற பல தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளன. வெளிநாடுகளிலுள்ள இந்துவின் பழைய மாணவர்களை ஒன்றிணைத்து கல்லூரியை வளர்ச்சியுறச் செய்ய வேண்டிய திட்டத்தினை ஐக்கிய இராச்சிய பழைய மாணவர் ஆசிரியர் சங்கம் நிறைவேற்ற வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

இச்சங்கம் மேலும் தனது செயற்பாட்டை விருத்தி செய்யவும், இவ் ஒன்று கூடல் சிறப்புற அமையவும் வாழ்த்துக்களை கல்லூரி அன்னையின் சார்பிலும், எமது பழைய மாணவர்களின் சார்பிலும் தெரிவித்துக் கொள்கின்றேன். இன்றைய நிகழ்வில் கலந்து கொண்ட எமது பழைய மாணவர்கள் ஆசிரியர்கள் அனைவருக்கும் நீண்ட ஆயுளும் நிறைவான செல்வமும் கிடைக்க இறைவனை இறைஞ்சுகின்றேன்.

அ.கயிலாயபிள்ளை
A. KAILAYAPILLAI அதிபர்
PRINCIPAL
J/Chavakachcheri Hindu College
National School
CHAVAKACHCHERI

# Island of tears

*I see my world,*
*Through chestnut eyes,*
*The war, the strife,*
*The broken sky,*

*A land divided,*
*Yet still the same,*
*The rebels, the republic,*
*And their violent games,*

*The blue seas,*
*Are now stained red,*
*And infinite families,*
*Collect their dead,*

*Guns fall silent,*
*Is it what it seems?*
*The amnesty I desire,*
*Seen only in my dreams.*

***Janani Raveenthiran***


## *Ambi School of Motoring*

**Pass your Test in 10 days**



DSA Approved

**Intensive Courses**
**Theory**
**Driving Instructor Training**

**We arrange Test in very short notice**
**Normal waiting time is 3 to 4 Months**

**Tel: 020 8421 1600**
**Mob: 07900 980 226**
**www.finalpass.com**

# சா/டிறிபேக் கல்லூரி அதிபரின் வாழ்த்துச் செய்தி



சாவகச்சேரி இந்துக்கல்லூரி பழையமாணவர், ஆசிரியர் சங்கத்தின் பிரித்தானியக் கிளையினரின் பதினைந்தாவது ஆண்டு நிறைவையொட்டி வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெருமையும் உவகையும் அடைகின்றேன். அத்துடன் அவ்விழாச் சிறப்படைய எனது இதயம் கனிந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் எங்கு, எப்படி இருந்தாலும் இந்து அன்னையின் மடியில் தவழ்ந்து, ஓடிவிளையாடி,கூடிக்கும்மாளமடித்து கல்வியின்பத்தைச் சுவைத்து மகிழ்ந்த காலத்தை மறக்க முடியுமா? "ஓட்டைவாளி நல்ல மேளம் ஓலைச்சுருள் நாகசீனம்" என்ற குருசாமி வாத்தியாரின் பாடலுடன் அரிவரியில் தொடங்கிய கல்லூரி வாழ்க்கை கண்ணாடி ரீச்சரின் கணக்கில் கலங்கி,உமையம்மையின் உருட்டலில் நடுங்கி ,வெற்றியின் உயிரியலில் நுழைந்து, மகேஸ்வரனின் வேதியலில் கரைந்து, குணசிங்கத்தின் இயல்பியலில் மிதந்து, பண்டிதர் பரஞ்சோதியின் இலக்கியக் குளத்தில் மூழ்கி எழுந்து இவ்வுலகில் நாமும் மனிதராக மாறியதை எவ்வாறு மறக்க முடியும்? மூக்கரின் கைவேலைப் பாடத்தில் நண்பன் கிருஷ்ணமூர்த்தி கயிறு திரித்துக்காட்டி நமக்கெல்லாம் கற்றுக் கொடுத்தது இன்றும் நிழலாடுகின்றது. அந்தப் பெருமைமிகு ஆசான்கள் செதுக்கிய சிற்பங்களாக, அவர்களால் புடம் போடப்பட்ட தங்கங்களாக இன்று தாயகத்திலும் புலம் பெயர் நாடுகளிலும் இந்து அன்னையின் புதல்வர்கள் புகழ்பரப்பி வருகின்றனர்.

நாம் எங்கு சென்றாலும், எப்படிப்பட்டவராக இருந்தாலும் 'வாழ்க இந்துக்கல்லூரி ....' என்ற அன்பு அன்னையின் கீதமும் "பரம்பரம் சோதி பரனே போற்றி என்ற தமிழிசைபாடலும் எமது காதுகளிலும், நாவிலும், உள்ளத்திலும் என்றும் ஒலித்துக்கொண்டே இருக்கும். அந்த ஆத்ம கீதங்கள் எம்மில் உயர்ந்த சிந்தனையையும் செயலையும் உருவாக்கிக் கொண்டே இருக்கும். அதன் மூலம் எம்மையெல்லாம் அவையத்தில் முந்தியிருக்கச் செய்த, சரியாசனம் தந்து சாமரம் வீசவைத்த இந்து அன்னையின் பாதங்களைப் பணிந்து போற்றுவோம். அவளின் புகழை உலகெங்கும் பரைசாற்றுவோம்.

வாழ்க இந்துக்கல்லூரி
வளர்க அதன் புகழ்.

க.அருந்தவபாலன்
முதல்வர்
சா/ டிறிபேக் கல்லூரி
சாவகச்சேரி

# CHAVAKACHCHERI HINDU O.S.T.A. (U.K.)

## CO- PATRONS



**Mrs. Saraswathy Ponnampalam**



**Mr. Perampalam Sivarajah**



**Dr. Namasivayam Sivayoganathan**



**Mr. M.S. Rajakulasingam**

**Message From The Principal**
**C/ Ramanathan Hindu Ladies College**
**Colombo -4**

# Message of Felicitation



It is with feeling of great joy, pride and gratitude that I send my greetings to the old Students, Teachers Association of Chavakachcheri Hindu College, London Branch on the occasion of their 15th Anniversary Year.

The college has been a seat of wisdom mainly for the people of Chavakachcheri . The contribution of the college is very evident from the achievements of the present and the past pupils. I feel proud about my ' Alma mater' and I am thankful for the guidance I received from my school I owe my position today to my "Alma mater".

I am glad to note that the United Kingdom Old Students, Teachers Association of Chavakachcheri is doing yeomen service to their college. I am sure they will continue to their good work in the service of the community for many centuries to come.

I wish and Pray that the blessings of God the almighty be upon the college. May it prosper in all its endeavours.

**Mrs. Kothai Nagularajah**
**Old Student**
**J/ Chavakachcheri Hindu College**

# Structure of Association 2009

| | |
|---|---|
| Patron:- | Mr. A. Kailayapillai (Principal,CHC) |
| Co. Patrons:- | Mrs. S. Ponnampalam<br>Dr. N. Sivayoganathan<br>Mr. M.S. Rajakulasingam<br>Mr. P. Sivarajah |
| Project Co-ordinator:- | Dr. K.V. Sivapathasuntharam |

## Governing Body

| | | |
|---|---|---|
| President | :- | Mr. S. Krishnamoorthy |
| Vice President | :- | Mr. S. Sivashankar |
| Secretary | :- | Mrs. Thevahi Jeyacumar |
| Asst. Secretary | :- | Mr. S. Kasinathan |
| Treasurer | :- | Mr. P. Vijayan |
| Asst. Treasurer | :- | Mr. T. Thirukumar |
| Social Secretary | :- | Mrs. A. Thangarajah |

## Committee Members

Mr. V. Ashokan
Mrs. K. Harichandra
Mrs. V. Jeyakanthan
Mr. K. Kumarathas
Mr. S. Nadarajah
Mr. T. Prabatharan
Mr. S. Raveendran
Mr. S. Sathyamoorthy
Mr. V. Thankarajah
Mr. S. Thayaparan

# J/LADIES COLLEGE
## CHAVAKACHCHERI
### OLD STUDENTS & TEACHERS ASSOCIATION (OSTA) UK

**Patron**
Principal – J/Ladies College

**Co-Patrons**
Mrs.G.Pararajasingham
Mrs T.Kulasekaram
Mrs.N.Perinpanayakam
Mrs T.Arulvelnathan

**INTERIM GOVERNANCE**

**President**
Miss.Geetha Arulvelnathan

**Secretary**
Mrs.Subothini Sriskandarajah

**Treasurer**
Mrs.Vasanthi Rajaratnam

**Vice President & Editor**
Mrs.Ananthy Baskaran

**COMMITTEE MEMBERS:**

1. Mr.N.Baheerathan
2. Bamini Manoharan
3. Mrinalini Sathiyalingam
4. Rajani Balaruban



It is a great a privilege and honour for our LCC-OSTA UK, to send a message of greetings and blessings to theChavakachcheri Hindu College OSTA (UK) Cultural Show

I had attended their cultural shows for the last few years. The enthusiasm an zeal, with which the organisers work for the success of the Annual shows, is something we are really proud of. In the midst of the busy life, it is a great achievement for this Association to conduct Annual Cultural Shows, with solely the purpose of raising funds to help the less fortunate students of their school. Their untiring service reflects their college, which had given them a sound education. It has also given the students the good moral education, which is very essential to meet the challenges of life.

The Association by holding Annual Cultural Shows had helped their school immensely. At a time when our people, specially the school going children are mentally, physically and financially affected in a war-torn country, the financial help that is raised is of immense help to meet the essential requirements of the school. It is note worthy that this Association has funded the school in all fields of education. It has also funded community projects and in various activities in the area.

Finally, I take this opportunity to congratulate CHC-OSTA UK for their tremendous service rendered to uplift their school in various fields.

May the good god give you all the blessings to continue this noble service not only to the school but also to the whole community.

Mrs T Arulvelnathan
B.A. Diploma in Education
Retd Teacher-Ladies College Chavakachcheri.

# நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| மங்கள விளக்கேற்றல் | வைத்திய கலாநிதி திருமதி சீதாலட்சுமி முருகேஸ்வரன்<br>திரு. க. பத்மகாந்தன் |
| கல்லூரிக் கீதம் | இந்துக்கல்லூரி பழைய மாணவிகள் |
| தலைவர் வரவேற்புரை | திரு. ச. கிருஷ்ணமூர்த்தி |
| வரவேற்பு நடனம் | A.S.I.A நடனப்பள்ளி மாணவிகள் |
| நினைவு சொற்பொழிவு | DR.N. சிவயோகநாதன் |

வாத்தியவிருந்து

| | |
|---|---|
| பிரதம விருந்தினர் உரை | DR. திருமதி சீதா முருகேஸ்வரன் |
| பரதநாட்டியம் | செல்வி ரம்பியா ஜெகதீசன் |
| கௌரவ விருந்தினர் உரை | திரு. க. பத்மகாந்தன் முன்னாள் உப அதிபர் சா.இ.க. |

இடைவேளை

பாட்டுக்கான நடனம்

ஓய்வு பெற்ற முன்னாள் ஆசிரியர்களை கௌரவித்தல்

| | |
|---|---|
| இன்னிசைவிருந்து | ஐரோப்பிய புகழ் "சித்திராலயா" இசைக்குழுவினர் |
| நன்றியுரை | தேவகி ஜெயக்குமார் – சங்க செயலாளர் |

ஒலி, ஒளி – **Kenton Sounds (Bala)**

நிகழ்ச்சித் தொகுப்பு: அபிராம், மகிந்தா

# Programme

| | |
|---|---|
| Lighting of the Traditional lamp | Dr. (Mrs) S. Murugeswaran |
| | Mr. K. Pathmakanthan |
| College Anthem | CHC Old Students |
| Welcome Speech by the President | Mr. S. Krishnamoorthy |
| Welcome Dance | Students of A.S.I.A |
| Memorial Speech By | Dr. N. Sivaloganathan |
| Instumental Music | |
| Address by the Chief Guest | Dr. Mrs. S. Murugeswaran |
| Bharathanatyam | By Selvi Ramiya Jegatheesan |
| Speech by Guest of Honour | Mr.K. Pathmakanthan Ex Deputy Principal C.H.C |

# Interval

| | |
|---|---|
| Dance for Songs | |
| Honouring the Retired Teachers | |
| Light Music By "Chithralaya" Music Group | |
| Vote of Thanks by Secretary | Mrs Thevahi Jeya Cumar |

Light, Sound - Kenton Sounds (Bala)

Comperes: Abiram, Mahentha

## 15வது ஆண்டு விழாவில் கௌரவிக்கப்படும் இந்துவின் முன்னாள் ஆசிரியர்கள்

1. திரு அ. வே. பஞ்சாட்சரம் பழைய மாணவர் (1942 - 1948)
   பதவி வகித்த காலம் :- 1949 - 1964 / 1973 - 1981
   பிரிவு :- மேல் பிரிவு தமிழ், இந்து சமயம், நாடக துறை

2. திரு S. பேரின்ப நாயகம் பழைய மாணவர்
   பதவி வகித்த காலம் :- 1962 - 1964 / 1971 - 1990
   பிரிவு :- ஆரம்ப பிரிவு, மேல் பிரிவு தமிழ், சமயம்

3. திரு K. மகாதேவா
   பதவி வகித்த காலம் :- 1966 - 1984
   பிரிவு :- உயர்தரவகுப்பு கணிதத்துறை

4 திரு ஏ. பரம்சோதி
   பதவி வகித்த காலம் :- 1966 - 1983
   பிரிவு :- உயர்தர வகுப்பு தமிழ், இந்துநாகரீகம்,

5. திருமதி சரஸ்வதி பொன்னம்பலம் பழைய மாணவி (1939 - 1955)
   பதவி வகித்த காலம் :- 1968 - 1990
   பிரிவு :- ஆரம்ப பிரிவு

6. திருமதி S. பேரின்ப நாயகம்
   பதவி வகித்த காலம் :- 1969 - 1970
   பிரிவு :- மேல் பிரிவு கணிதம்

7. திருமதி ப. அழகரட்ணம்
   பதவி வகித்த காலம் :- 1970 - 1987
   பிரிவு :- ஆரம்ப பிரிவு

8. திரு அ. தங்கராசா
   பதவி வகித்த காலம் :- 1973 - 1974
   பிரிவு :- மேல் பிரிவு ஆங்கிலம்

9. செல்வி ஜெகசோதி விநாயகமூர்த்தி
   பதவி வகித்த காலம் :- 1985 - 1990
   பிரிவு :- உயர்தரவகுப்பு பௌதிகதுறை

10. திருமதி பா. தையல் நாயகி பழைய மாணவி (1948 - 1957)
    பதவி வகித்த காலம் :- 1997 - 1998
    பிரிவு :- மேல் பிரிவு ஆங்கிலம்

11. திருமதி ராதா சரவணபவன் பழைய மாணவி (1958 - 1972)
    பதவி வகித்த காலம் :- 1978 - 1980
    பிரிவு :- மேல் பிரிவு கணிதம், விஞ்ஞானம்.

## சா. இ. கல்லூரி பழைய மாணவர், ஆசிரியர் சங்க ஐக்கிய இராச்சியக்கிளையின் உப காப்பாளரின் வாழ்த்துச் செய்தி



சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்க பிரித்தானியக் கிளையினர் நடாத்தும் கலைவிழா 2009 இல் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகளைச் சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது பிரித்தானியக் கிளையாகிய குழந்தை 1995ம் ஆண்டு பிறந்து துரித வளர்ச்சியடைந்து இன்று பதினைந்தாவது வயது பருவ மங்கையாக வளர்ச்சியடைந்து விட்டாள். நாம் வருடா வருடம் நிகழ்த்தும் ஒன்றுகூடல் மூலம் சேகரிக்கும் பணத்தின் செலவு தவிர மிகுதிப்பணத்தை தாய்கல்லூரியின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு அனுப்பி வருகின்றோம். அத்துடன் இந்து அன்னையின் பழைய மாணவர் குடும்பமாக வருகைதந்து அவர்களுடைய குழந்தைகளும் நிகழ்ச்சிகளிற் கலந்து அளவளாவி மகிழும் சந்தர்ப்பமும் ஏற்பட வாய்ப்பாக அமைகின்றது. இதற்கு முக்கியமாக எமது பழைய மாணவர்களின் ஒற்றுமையும் ஒத்துளைப்புமே காரணமாகும்.

மேலும் எமது இச்சங்கமானது மென்மேலும் வளர்ச்சியடைந்து தொடர்ந்தும் எமது தாய்க்கல்லூரிக்கு பல ஆக்கபூர்வமான உதவிகளைச் செய்வதற்கு எமது அங்கத்தவர்களும் நலன் விரும்பிகளும் உதவிக்கரம் நீட்டவேண்டுமென வேண்டுவதுடன் மேற்படி விழா இனிதே நடைபெற இறையருள் வேண்டி எமது ஆசியையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**நன்றி**

**திருமதி சரஸ்வதி பொன்னம்பலம்**
**உப காப்பாளர்**
**சா.இ.ப. மாணவர் ஆசிரியர் சங்கம்**
**பிரித்தானியக்கிளை.**

# இந்துவின் புகழ்பூத்த அதிபர்

## அமரர் பூ.வெற்றிவேலு 1970 -1984

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி யின் வளர்ச்சிப் பாதையில் முத்திரைபதித்த புகழ்பூத்த அதிபர் அமரர் பூ.வெற்றிவேலு ஆவார். தனது ஆசிரிய சேவைக்காலம் முழுவதையும் கல்லூரியின் வளர்ச்சிக்கு பல்வேறு படிநிலைகளில் அர்ப்பணித்தவர். அவர் ஆசிரியராக, பிரதி அதிபராக, இருந்த காலங்களில் அவரது ஆற்றலையும், ஆளுமையையும் 1966 முதல் 1974 வரை மாணவனாக இருந்து அனுபவித்து பயன் பெற்றவன் என்ற வகையிலே அவரது கல்லூரி செயற்பாடுகளை நினைவு கூர்கின்றேன்.

எமது அதிபர் அமரர் பூ.வெற்றிவேலு அவர்கள் தென்மராட்சியில் சிறப்புப் பெற்றி ருந்த டிறிபேக் கல்லூரி, யாழ்ப்பாணம், சென்.பற்றிக்ஸ் (St.patricks College) ஆகிய வற்றிலும் பின்னர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும் கல்வி கற்றவர். கத்தோலிக்க வண.பிதாவும் சென்பற்றிக்ஸ் கல்லூரியின் அதிபருமாக இருந்த வண.பிதா லோங் அவர்களிடம் கல்வி கற்றபோது பெற்ற அனுபவம் யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்தது என யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி நூற்றாண்டு மலரின் (2004) **"அனுபவம் தந்த கல்வி"** எனும் கட்டுரையில் அமரர் வெற்றி வேலு அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் நாட்டின் புகழ் பெற்ற சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் தனது விஞ்ஞானப் பட்டப்படிப்பை நிறைவு செய்த இவர் 1949 ஆம் ஆண்டில் விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியராக இணைந்து கொண்டார். அக்காலத்தில் கல்லூரியின் முதல்வராக திரு T.முத்துக்குமாரு அவர்கள் கடமையாற்றினார். இவரைத் தொடர்ந்து திரு A.S.கனகரத்தினம் அவர்கள் அதிபராக நியமிக்கப்பட்டார். (1952-1953) கல்லூரியின் ஒழுக்காற்றுச் சபை இவரது காலத்தில் அமைக்கப்பட்டதுடன் மாணவ தலைவர்கள் மாணவர்களின் வாக்கு அடிப்படையில் தெரிவு செய்யும் முறையும் ஆரம்பிக்கப்பட்டது. இக்காலத்தில் ஒழுக்காற்றுச் சபை பொறுப்பாசிரியராக அமரர் பூ.வெற்றிவேலு அவர்கள் நியமிக்கப்பட்டார். திரு A.S.கனகரத்தினம் அவர்களைத் தொடர்ந்து எஸ்.கே.செல்லையா, திரு ஏ.மண்டலேஸ்வரன், திரு.ஏ.கந்தையா ஆகியோர் அதிபராகக் கடமையாற்றினர். இவர்களது காலத்தில் எமது அதிபர் விஞ்ஞான ஆசிரியராக கல்லூரியில் சேவை செய்தார்.

1966 ஆம் ஆண்டு திரு மு.வைத்திலிங்கம் அவர்கள் அதிபரானார். இவருக்கு 1966 முதல் 1968 வரை திரு சீ.பாலசுப்பிரமணியம் அவர்கள் பிரதி அதிபராகக் கடமையாற்றினார். 1968 இல் அமரர் பூ.வெற்றிவேலு அவர்கள் பிரதி அதிபரானார். 1970 ஆம் ஆண்டில் திரு மு.வைத்திலிங்கம் அவர்கள் ஓய்வு பெறஅமரர் வெற்றிவேலு அவர்கள் 1970 இல் அதிபராக நியமனம் பெற்றார்.

இவர் அதிபராக பதவியேற்ற காலத்தில் எமது கல்லூரி க.பொ.த (உ/த) கலைத்துறையில் முன்னணியில் இருந்தது. விஞ்ஞானத்துறையை வளர்க்க வேண்டிய பொறுப்பு இவருக்கு இருந்தது. தரம் 1 முதல் க.பொ.த உயர்தரம் வரை வகுப்புக்கள் இருந்த போதிலும் போதிய காணி, கட்டட வசதிகள், ஒழுங்கமைக்கப்பட்ட நூலகக் கட்டடம் என்பன இல்லா நிலையிருந்தது. இவர் பெற்றோர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், ஆசிரியர்கள்மாணவர்கள் எல்லோரையும் ஒன்றிணைத்து கல்லூரியை ஒரு பயன்தரு பாடசாலையாக மாற்றியமைத்தார்.

இவரது காலத்தில் கல்லூரி பௌதீக வளர்ச்சியால் கவினுறு தோற்றம் பெற்றது. 1971 ஆம் ஆண்டு அரசின் உதவியுடன் ஐந்து வகுப்பறைகள் கொண்ட ஓர் கட்டடத்தை நிறுவினார். பழைய மாணவர் சங்கத்தின் துணையுடன் ஆரம்பிக்கப்பட்ட OSA Science Block 1972 ஆம் ஆண்டு இவரது காலத்தில் பூர்த்தி செய்யப்பட்டு இன்று தென்மராட்சியின் சிறந்த விஞ்ஞான ஆய்வு கூடமாகத் திகழ்கின்றது. இக்கட்டடத்தினை நிறுவுவதற்கு பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், பெற்றோர்கள் பண உதவி செய்தனர். கல்லூரி மாணவர்களாகிய நாமும் நிதி சேகரிப்பு அட்டைகள் மூலம் பணம் சேகரித்தோம். அக்காலத்தின் நிதி அமைச்சர் கலாநிதி N.M.பெரேரா அவர்களால் இவ் ஆய்வு கூடம் திறந்து வைக்கப்பட்டது. இதே ஆண்டு அரச நிதி ஒதுக்கீட்டில் 5 வகுப்பறைகள் கொண்ட மேலும் ஓர் வகுப்பறைத் தொகுதி (D'Block) நிறுவப்பட்டது.

அமரர் வெற்றிவேலு அவர்கள் அதிபராக இருந்த காலத்தில் கல்வித் திணைக்களங்கள், பணிப்பாளர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் பெற்றோர்கள், நலன்விரும்பிகள் கவனத்தை கல்லூரியின் பால் ஈர்த்து அவர்களின் உதவியுடன் கல்லூரியின் வளரச்சிக்கு உதவியுள்ளார். 1973 ஆம் ஆண்டில் பாராளுமன்ற உறுப்பினர் திரு வ.ந.நவரத்தினம் அவர்களின் உதவியுடன் ஐந்து வகுப்பறைகள் கொண்ட C மண்டபத்தை நிறுவினார். பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினரின் உதவியுடன் தொழிற்கூடம் (A Block) நிறுவப்பட்டது. இது தற்போது நடன பாடத்துக்கான வகுப்பறைத் தொகுதியாயுள்ளது.

1974 ஆம் ஆண்டில் நான்கு வகுப்பறைகள் கொண்ட மேலும் ஓர் வகுப்பறைத் தொகுதி அரசு வழங்கிய 20,000 ரூபா நிதி உதவியுடன் நிறுவப்பட்டது. 1976 ஆம் ஆண்டில் தற்போதய கல்லூரி அலுவலகத் தொகுதியும் முன்னைய நூலகமும் கொண்ட நூலகக் கட்டடம் பெற்றோர் ஆசிரிய சங்கத்தினால் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. கல்லூரியின் மாணவர்களின் அறிவுப் பசியைத் தீர்ப்பதற்கும், ஆளுமையை வளர்ப்பதற்கும் இந்நூலகம் வழிவகுத்தது. கல்லூரிக்கும் ஓர் மிடுக்கான தோற்றத்தை வழங்கியது. இதே ஆண்டு அரசு வழங்கிய ஒன்றரை லட்சம் ரூபா நிதியில் எட்டு வகுப்பறைகள் கொண்ட இரு மாடிகளைக் கொண்ட H மண்டபம் உருவாக்கப்பட்டது. கல்லூரியின் பிரதான கட்டடங்களாக இன்றும் H மண்டபமும் OSA விஞ்ஞான ஆய்வு கூடமும் விளங்குவதை அவதானிக்க முடியும்.

கல்லூரியின் விளையாட்டு மைதானத்தை விஸ்தரிப்பதற்காக கல்லூரியின் வடக்குப் புறமாக எட்டுப் பரப்பு காணி 40,000 ஆயிரம் ரூபாவுக்கு 1973 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டது. இதன் மூலம் விளையாட்டு மைதானம் உருவாக்கப்பட்டு பெற்றோர், ஆசிரியர்கள், மாணவர்கள் உதவியுடன் விளையாட்டு மைதானத்துக்கு சிரமதான அடிப்படையில் மண் நிரப்பி புல் பதிக்கப்பட்டது. இந்நிகழ்வில் மாணவர்கள் மிக ஆர்வத்துடன் பங்குபற்றியதையும் பெற்றோர் தமது உழவு இயந்திரங்களை சிரமதான அடிப்படையில் உதவியதையும் நினைத்துப்பார்க்க முடிகிறது.

கல்லூரியின் பிரதான மண்டபம் 1977 ஆம் ஆண்டு புனரமைக்கப்பட்டது. சுப்பிரமணியம் திறந்த வெளி அரங்கும் பிரதான மண்டபமும் இணைக்கப்பட்டு அருணாசலம் உள் அரங்காகவும், சுப்பிரமணியம் திறந்த வெளியரங்காகவும் பயன்படுத்தக் கூடியதாக மாற்றி அமைக்கப்பட்டது. இதற்கு ரூபா 25,000 செலவிடப்பட்டது. 1978 ஆம் ஆண்டில் கல்லூரியின் ஆரம்ப பிரிவுக்கென இருமாடிக் கட்டடம் அமைக்கப்பட்டது. அக் கட்டடம் தற்போது இந்து ஆரம்ப பாடசாலையாக உள்ளது குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

1979 ஆம் ஆண்டில் ஓர் தேர்தல் தொகுதிக்கு ஓர் மத்திய மகாவித்தியாலயம் அமைக்கும் திட்டத்தின் கீழ் யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி மத்திய மகாவித்தியாலயமாக தரம் உயர்த்தப்பட்டது. இக்காலத்தில் இக்கல்லூரி இரண்டாயிரத்து ஐந்நூறுக்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட தென்மராட்சியின் முதன்மைப் பாடசாலையாக வளர்ச்சி பெற்றது. இதே ஆண்டில் பிரதான மண்டபத்தின் அரங்கில் உடைமாற்றும் அறைகள் உட்பட மேலும் புனரமைப்புக்கள் செய்யப்பட்டன. தற்போது வெற்றிவேலு கேட்போர் கூடம் என்று அழைக்கப்படும் T.V மண்டம் (இருமாடி) ஆசிரியர் ஓய்வு அறை மனையியல் கூடம் ஆகியன அமைக்கப்பட்டன. TV மண்டபம் ஆசிரியர் ஓய்வறை ஆகியன கல்லூரியின் பழைய அலுவலகத் தொகுதியை இடித்து அவ்விடத்தில் அமைக்கப்பட்டவை. இவை இன்றும் கல்லூரிக்கு புதுப் பொலிவைக் கொடுக்கின்றன.

மாணவர் தொகை உயர மாணவர்களுக்கு குடிநீர் வழங்க வேண்டிய பொறுப்பு இருந்தது. இந்துக் கல்லூரியின் சுப்பிரமணியம் திறந்த வெளி அரங்கை நிறுவி உதவிய மீசாலையைச் சேர்ந்த கொடைவள்ளல் திரு மு.தா.சுப்பிரமணியம் J.P அவர்களின் உதவியுடன் விஞ்ஞான ஆய்வு கூடத்தின் பின்பகுதியில் ஓர் கிணறு அமைக்கப்பட்டது. அக்கிணற்றின் மூலம் கல்லூரிக்குத் தேவையான குடிநீர் வழங்கலுக்கேற்ற வசதிகள் அதிபரால் செய்து கொடுக்கப்பட்டது.

எமது அதிபரின் தீர்க்க தரிசனம் மிக்க செயற்பாடு யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள நான்கு தேசியப் பாடசாலைகளில் ஒன்றாக இன்று எமது கல்லூரி விளங்கவதற்கு அடிப்படையாக அமைந்தது என்றால் அது மிகையில்லை. அவரால் சிறந்த முறையில் பலப்படுத்தப்பட்ட இந்து அன்னை பிற்காலத்தில் ஏற்பட்ட யுத்த நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டாலும் கூட மீண்டெழக் கூடிய பலத்தைப் பெற்றிருந்தது. தனது மாணவர் தொகையைக் கூட ஓரே அளவாகப் பேணக் கூடியதாக இருந்தது.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து தனது பெயரை தென்மராட்சியில் நிலைபெற வைத்து இறைவனடி சேர்ந்த எமது அதிபர் அவர்களுக்கு இந்துக் கல்லூரி அதிபர் ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் பழைய மாணவர்கள் சார்பில் கண்ணீர் பூக்களைக் காணிக்கையாக்குகின்றேன்.

அ.கயிலாயபிள்ளை
அதிபர்
சாவகச்சேரிஇந்துக்கல்லூரி

# யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி

(தேசிய பாடசாலை)

# J/CHAVAKACHCHERI HINDU COLLEGE

**(NATIONAL SCHOOL)**

☎: 0212227640, 0602215189
**E-mail:chavahindu @ gmail.com**
**Principal :- Mr. A. Kailayapillai.**
**B.A (Hons), PGDE, MEd, SLPS – I**

**CHAVAKACHCHERI**
சாவகச்சேரி
06.03.2009




## பிரதி அதிபரின் வாழ்த்துரை

யாழ் சாவகச்சேரி இந்துக் கல்லூரி பழைய மாணவ ஆசிரிய சங்கப் பிரித்தானிய கிளையினரின் வருடாந்த மலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

அந்நியருடைய ஆட்சிக் காலத்தில் சைவத்திற்கும் தமிழுக்கும் ஏற்பட்ட துன்பியலைக் கண்டு பொறுக்காத பெருமக்கள் தமிழ்ப் பிரதேசங்களில் சைவத்தையும் தமிழையும் வளர்க்கும் நோக்குடன் ஆங்காங்கே பல இந்துக்கல்லூரிகளை ஆரம்பித்து தமிழையும் சைவத்தையும் வளர்க்க அரும்பாடுபட்டனர். இந்த வகையில் சாவகச்சேரியில் திரு வி.தாமோதரம்பிள்ளை ஐயா அவர்கள் எமது பாடசாலையை ஆரம்பித்தார். அது இன்று படிப்படியான வளர்ச்சி கண்டு தேசிய பாடசாலை அந்தஸ்தை அடைந்துள்ளது. இந்த அந்தஸ்தைப் பெறுவதற்கு அன்னை அடைந்த துன்பங்கள், வேதனைகள் எண்ணிலடங்காது. இருந்தாலும் இந்த வேதனைகள் துன்பங்கள் அனைத்தையும் இன்று தன்னால் வளர்த்தெடுக்கப்பட்ட குழந்தைகளின் வாழ்க்கைச் செழுமைகண்டு பூரிப்படைந்து நிற்கின்றாள். சைவம், தமிழ் மட்டுமல்ல ஆங்கில மொழியோடு கூடிய கணித விஞ்ஞான, வர்த்தக கலைத்துறைகளுடாக தனது குழந்தைகளை வாழும் உலகிற்குத் தயார்ப்படுத்திய பெருமையுடன் பூரிப்படைகின்றாள். இதற்குப் பிரதியீடாகவோ என்னவோ அன்னையால் வளர்த்தெடுக்கப்பட்டு, உலகெங்கும் பரந்து வாழுகின்ற இந்துவின் குழந்தைகளின் நல்நோக்கத்தினால் தன்னையும் வளப்படுத்தி தென்மராட்சி மூலை முடுக்குகளிலிருந்து வரும் குழந்தைகளை 21ஆம் நூற்றாண்டில் வாழத் தகுதியுள்ளவர்களாக வளம்படுத்தி சிறந்த வெளியீடாக அனுப்புகின்றாள்.

இந்த வகையில் உங்களை வளர்த்தெடுத்த அன்னைக்கு நீங்கள் செய்த உதவிக்கும் செய்யவுள்ள உதவிக்கும் இறைவன் திருவருள் கிடைக்க இறைஞ்சுகின்றேன். மேலும் அன்னையின் பெருமைகளை சர்வதேச அரங்கில் நிலைபெறச் செய்வீர்கள் என்ற நம்பிக்கையுடன் இறைவன் நல்லாசிகளை வேண்டி வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

06.03.2009

திரு ந.பாலச்சந்திரன்
பிரதி அதிபர் (நிர்வாகம்)
யாழ் சாவகச்சேரி இந்துக் கல்லூரி,
சாவகச்சேரி.



தலைவர்/செயலாளர்,
பிரித்தானியா – சாவகச்சேரி இந்துக்கல்லூரி
பழைய மாணவர் ஆசிரியர் சங்கம்.

## என் இனிய வாழ்த்துக்கள்

எதிர்வரும் 28-03-2009 அன்று ஆண்டுவிழாவை நிறைவாகக் காணவிருக்கும் பிரித்தானியா-சாவகச்சேரி இந்துக்கல்லூரி பழைய மாணவர், ஆசிரியர் சங்கத்திற்கு என் இனிய வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

கடல் கடந்து வாழ்ந்தாலும், எமது பாடசாலை அன்னையின் முன்னேற்றத்தில் பெரிதும் கரிசனை காட்டி, அவ்வப்போது எங்கள் தேவையறிந்து தாங்கள் ஆற்றிவரும் உதவிகளுக்கு நாம் எமது மனப்பூர்வமான நன்றிகளை இவ்வேளையில் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தாங்கள் காலமறிந்து செய்த உதவியின் பயனாக சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலைக்கு புதிய இரண்டு இருமாடிக் கட்டிடங்கள் துரிதகதியில் நிர்மாணிக்கப்படுவதையும், அவை விரைவில் பூர்த்தியடைந்து இந்து ஆரம்பப்பாடசாலை அக்கட்டிடத்தில் ஆரம்பமாகவிருக்கும் மகிழ்ச்சியான செய்தியையும் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

நிறைவாக தங்களுக்கும், சங்கத்தினைச் சார்ந்த அனைத்து அங்கத்தவர்களுக்கும், சாவகச்சேரி இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் சார்பாக பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்றி

**யோகேஸ்வரன் ஜெயக்குமார்**
**பொருளாளர்**
**சாவகச்சேரி இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்.**
**18-03-2009.**

# TK SIYA BHAVAN
## Sri Lankan Catering Express

from £1 per box

**Veg OR Non-Veg Lunch Box**
**only £2.50**

**OPENING HOURS**
**10.00am till 11pm (Mon - Sun)**

**Veg Rolls, Bonda, Susiam, Vadai Patties, Samosa**

**Free Delivery**
for orders placed at least 24 hours in advance within a 3 mile radius.
Minimum order £30

**Tel: 020 8902 8083 /079 5831 9563**
**7 The Parade, Sudbury Heights Avenue**
**Greenford, Middx UB6 0LZ.**
**www.tksiya.com**



# TK SIYA BHAVAN
ஆதரவில் இலண்டன் தமிழ் வானொலியில்

## இலக்கிய சங்கமம்

வாரம் தோறும்
வியாழன் மாலை 7மணி ~8மணி
சனி மதியம் 1மணி ~ 2 மணி
கேட்டு மகிழுங்கள்

HOTBIRD 11013H
24 HOURS
www.firstaudio.info
Mob: 07956 25 66 36

## மனிதநேயன் – இந்துவின் முன்னாள் முதல்வர்



### அமரர் திரு க. சந்திரசேகரா

தென்மராட்சிப் பிரதேசத்தில் புகழ்மிக்கதும் எமது தேசிய பாடசாலையுமாகிய சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் அதிபராக கடமையாற்றி அமரர் சந்திரசேகரா 17.09.2008 இறைபதம் அடைந்த செய்திகேட்டு இலங்கையில் மட்டுமல்ல பிரித்தானியா மற்றும் மேலைநாடுகளில் வாழும் நண்பர்கள், ஆசிரியப் பெருந்தகைகள் முன்னாள் மாணவர்கள் என முழு உலகமுமே அதிர்ச்சியில் ஆழ்ந்தது.

சிவந்த அழகிய, கம்பீரமானதோற்றம், மலர்ந்த முகம், மென்மை, இன்சொல் என்பன அவருக்கு இயற்கை அன்னை அளித்த அம்சங்களாகும். பண்பு பகட்டில்லா வாழ்வு, பாரபட்சமற்ற சேவை, விவேகம், விடாமுயற்சி என்பன அவர் மக்களுக்கு திருப்பித் தந்த பரிசாகும்.

அமரர் சந்திரசேகரா அவர்கள் அதிபராக பணியாற்றிய காலம் உண்மையில் கல்லூரியின் ஒரு பொற் காலம் ஆகும்.

இந்துக்கல்லூரி ஒரு தேசிய பாடசாலையாகத் தரம் உயர்ந்ததும், சகலதுறைகளிலும் மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு படையெடுத்த காலமும் இவர் அதிபராக இருந்த காலத்தில் தான் என்பது மறக்கமுடியாதது. அதேநேரம் தொண்ணூறுகளில் வலிகாமம் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த மக்களுக்கும் மாணவர்களுக்கும் நிறுவனங்களுக்கும் மிகவும் நெருக்கடியான காலகட்டங்களில் இடம் கொடுத்து, ஆர்ப்பாட்டம் இல்லாமல் அரும்பணி செய்து மாணவர் மத்தியில் மதிப்புடன் திகழ்ந்தவர்.

தனது நுண்ணறிவை சொல் வன்மையால் பெருக்கி எமது சமுதாயத்தில் ஒரு சுடர் விளக்காய் விளங்கியவர். ஒரு சிறந்த பொருளியல் ஆசிரியராக, பின்பு பிரதி அதிபராக, 1990ல் அதிபராகவும் பொறுப்பேற்று அவர் செய்த சேவையினால் எமது சமுதாயம் ஏற்றம் பெற்றது.

கல்விச்சேவை மட்டுமன்றி, பல பொதுச்சேவைகள், அறநெறி மற்றும் திருப்பணி வேலைகள் என்று தன் வாழ்க்கையின் பெரும்பகுதியை எம் சமுதாயத்திற்காக வழங்கிய ஒரு பேராளன்.. இந்த உலகம் உவக்கும் உத்தமர் செய்த சமுதாய சேவைகள் எழுத்தில் அடங்காதவை.

எமது ஐக்கிய இராச்சியக் கிளை அமரர் சந்திரசேகரா அவர்களை பிரதம அதிதியாக அழைத்து பெருமையடைந்தது. அவர் சில நாட்கள் இங்கு தங்கிய காலங்களிலும் எம்மக்களின் வளர்ச்சியையே முன்வைத்து அவர் எண்ணங்கள் மிளிரும். அல்லாரைப்பகுதியில் ஒரு சமூகமேன்பாட்டு நிலையம் எமது அறவழியூடாக நிறுவவேண்டும் என்ற என் அன்புவேண்டுகோளையேற்று முன்னின்று பணிசெய்து முழுமையடையச் செய்தவர். அல்லாரை அறுகம்புலம் மகா கணபதிப்பிள்ளையார் ஆலயத்தின் பக்தனாக, தொண்டனாக அதன் பல்வேறு பௌதிக வளர்ச்சிகளிலும் தன் வாழ்க்கையை அர்ப்பணித்தவர்.

வன்னி மண்பெற்றெடுத்த தவப்புதல்வன் அமரர் சந்திரசேகரா. ஒருவன் எவ்வளவுகாலம் வாழ்ந்தான் என்பது பெரிதல்ல, அவன் தன் வாழ்நாளில் என்ன சமுதாயத்திற்கு செய்தான் என்பதே பெரிது என ஒரு உதாரண புருசனாக எம்மிடையே வாழ்ந்தவர்.

ஒரு கவிஞனின் வாழ்வை அவன் படைத்த காவியங்கள் நிலைநிறுத்தும், ஒரு சிற்பியின் வாழ்வை அவன் செதுக்கிய சிலைகள் பறைசாற்றும். அமரர் சந்திரசேகரா அவர்களின் வாழ்க்கையை அவர் உருவாக்கிய அறிவுச் சமுதாயம் சான்று பகரும். உன்னத இலட்சியத்தை பற்றுக்கோடாகக் கொண்டு வாழ்ந்தவர்கள் என்றும் சாவதில்லை. அவர்கள் மக்கள் உள்ளங்களில் என்றும் வாழ்வார்கள்.

**Dr. N. Sivayoganathan**


# Association Officials 2009




**Seated (L-R):-** Mr. P. Sivarajah (Co-Patron), Mrs. S. Ponnampalam (Co - Patron), Mrs . Thevahi Jeyacumar (Secretary) , Mr S. Krishnamoorthy (President), Mr. M.S. Rajakulasingam (Co- Patron, Dr. N. Sivayoganathan (Co - Patron)

**Standing (L-R):-** Mrs K. Harichandra, Mr. S. Sathyamoorthy, Mr. T. Thirukumar, Dr. K. V. Sivapathasundaram (Project Co- Ordinator), Mr. V. Ashokan (Internal Auditor), Mr. K. Kumarathas, Mr. V. Thangarajah, Mr S. Jeyacumar, Mr S. Thayaparan, Dr. P. Jegatheesan, Mrs A. Thangarajah.

**Absentees:-** Mr.S. Sivasankar, Mr. S. Kasinathan, Mr. P. Vijayan(Treasurer), Mr.S. Nadarajah, Mr. S. Raveendran, Mrs. V. Jeyakanthan (Past President)





15.04.2006இல் நடைபெற்ற கலை நிகழ்ச்சியின் போது
பழைய மாணவர்களுடன் அதிபர் சந்திரசேகரா



# சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் சில சாதனையாளர்கள்

நீண்ட காலம் அதிபர் பதவியில் இருந்தவர்



அமரர் பூ. வெற்றிவேலு – நுணாவில்
(1970 -1984)
14 வருடங்கள்

நீண்ட காலம் உபஅதிபர் பதவியில் இருந்தவர்



க. மகேஸ்வரன் – சரசாலை
(1970 -1984)
14 வருடங்கள்

இந்துக்கல்லூரியில் மாணவனாக இருந்து பல்கலைக்கழகம் சென்று முதன் முதலில் அதிபர் பதவியை பெற்றவர்



அ. கயிலாயபிள்ளை – மீசாலை
தற்போதய அதிபர் (2004 முதல்)
மாணவனாக (1966 -1974)

---

இந்துக்கல்லூரியில் மாணவனாகவும் ஆசிரியராகவும், உப அதிபராகவும் அதிபராகவும் பதவி வகித்தவர்



க. மகேஸ்வரன் – சரசாலை
மாணவர்: – 2வருடங்கள்
ஆசிரியர் பதவி: –
உபஅதிபர் பதவி: – (1970 -1984)
அதிபர் பதவி: – (1984 - 1985)

இந்துக்கல்லூரியில் மாணவனாகவும் ஆசிரியராகவும், உப அதிபராகவும் பின்னாளில் பாராளுமன்ற உறுப்பினராகவும் அமைச்சராகவும் இருந்தவர்.

வேலுப்பிள்ளை குமாரசாமி
(தாமோதரம் வீதி)
சாவகச்சேரி

இந்துக்கல்லூரியில் மாணவர் ஒருவர் தேசிய மட்டத்தில் தடியூன்றி பாய்தல், தத்தி மிதித்து பாய்தலில் சாதனை படைத்தவர்



வேலுப்பிள்ளை வாமதேவன்
(1957 இல்)
(தாமோதரம் வீதி)

இந்துக்கல்லூரியில் மாணவியாக இருந்து பின்னர் இந்துக்கல்லூரியிலேயே ஆசிரிய தொழிலை ஆரம்பித்து ஓய்வு பெறும் வரை இந்துக்கல்லூரியில் இருந்த மும் மணிகள் (50 வருடங்களுக்கு மேல்)



அமரர் இராச லச்சுமி சபாநாயகம்
மாணவி: – 1934 -1944
ஆசிரியை: – 1948 -1989
(51 வருடங்கள்)



திருமதி காமாட்சி யோகீஸ்வரன்
மாணவி: – 1931 - 1941
ஆசிரியை: – 1943 -1983
(50 வருடங்கள்)



திருமதி மீனா திருஞானசம்பந்தர்
மாணவி: – 1935 -1946
ஆசிரியை: – 1949 -1989
(51 வருடங்கள்)

---

இந்துக்கல்லூரியில் ஆரம்பவகுப்பு (சின்னஅரிவரி) முதல் உயர்தர வகுப்பு வரை படித்து சிரேஸ்ட மாணவ தலைவராக இருந்து பல்கலைக்கழகம் சென்று பட்டதாரியாக வெளியேறியவர்கள்



சதாசிவம் நடேசமூர்த்தி B.A.
பெரதெனியா
(1954 -1968)

செல்லத்தம்பி செல்வக்கதிரமலை BSc.
பெரதெனியா
(1961 -1977)

இந்துக்கல்லூரியில் இருந்து முதல் முதலில் மருத்துவ பீடத்துக்கு தெரிவுசெய்யப்பட்டவர்

அமரர். செல்வி இளையதம்பி பராசக்தி
(1978)
சங்கத்தானை

தொகுத்து வழங்கியவர்: – ச. கிருஷ்ணமூர்த்தி

# CHC OSTA (U.K.) SECRETARIES (1995 - 2009)


Late T. Ranganathapillai
1995 - 1996


Mr. S. Jeyacumar
1997


Mr. S. Krishnamoorthy
1998 -1999


Mr. S. Sivashankar
2000 -2001


Mr. S. Sathyamoorthy
2002


Mr. P. Vijayan
2003


Mr. T. Kangatharan
2004


Mr. S. Sutharsan
2005


Mr. S. Ahilan
2006


Mrs A. Thangarajah
2007


Dr. N. Sivayoganathan
2008


Mrs. Thevahi Jeyacumar
2009

# Message from the Secretary



As secretary of Old Students and Teachers Association of Chavakachcheri Hindu College (CHC), I would like to welcome you to our 15th annual cultural event. Recently, our beloved island has once again plunged into a dark period of chaos, warfare and destruction. As the situation in Sri Lanka reaches a new crisis point, we must do our best in helping our troubled school uphold the high standards it stands for, while doing all we can to protect it from the death and devastation slowly edging towards it. Therefore, I urge you all to do your bit, no matter how small, in helping us, our school and our country strive towards the glimmer of hope in the dark and distant horizon. Your contributions can help us so much in preserving the education of the future generations that will live amidst the aftermath of the conflict.

It has been decided that this year's programme will be dedicated to the severe poverty and hardship endured by our schoolchildren in receiving a full, vital education at both CHC and university. As many of you are aware, a worryingly high percentage of parents receive no income at all. Just think for a minute what they must go through everyday knowing there is no money to further their children's education. CHC has therefore indicated the setting up of a "Hardship Assistance Fund" to provide support for badly affected children and a hardship loan fund to offer loans to deserving students entering the university. A selection criterion has been worked out and being considered by all concerned.

In addition to offering support to this initiative, Old students and Teachers Association, UK is also appealing to individuals who may wish to contribute to this good cause. You can do so by contacting one of our committee members. As always, we count on your goodwill this year to raise a good sum of money towards supporting these capital funds.

On a lighter note, I would like to thank all those who could come to this event and those who made this event possible. Thanks to your contributions, we remain confident that this night will be as successful as its predecessors in raising the vital funds needed to sustain the running of our beloved school through these dark and difficult times. Without these individuals and groups, this night could never have happened, and we would have remained powerless in helping our school guide young minds to a future hopefully a lot brighter than the one within which it currently resides.


Thevahi Jeyacumar
Secretary
OSTA (UK), CHC

# Letz Move Property Ltd

Estate Agents & Property Buyers -

## Estate Agents & Property Buyers - London

**Comprehensive list of Agents in London dealing with land (includes agricultural, farmland, self-build, woodland, grazing, investment, pony paddock), architects, property developers, builders, estate agents, surveyors and valuers**



**182 Mitcham Road**
**London**
**SW17 9NJ**
**London**

**Tel: 020 87675800**

# பிரபாஸ் தமிழ்க்கடை

இலங்கை இந்திய உணவுப்பொருட்கள்



தரமான பொருட்களை

மலிவான விலையில்

நிறைவான சேவையுடன்

பெற்றுக்கொள்ள ஓர் இடம்

பழைய புதிய திரைப்பட
Audio Cd, VCD, DVD
பெற்றிட...

# PRABAS

415 Alexandra Avenue
Rayners Lane
Harrow
HA2 9SG

020 8866 0977

# WILSON FINANCIAL SERVICES

Mortgages :: Re-Mortgages :: Buy-to-Let Mortgages
Commercial Mortgages :: Business Loans :: Insurances

*We are experts in finding you a mortgage or remortgage to suit your needs*

Remortgages - with a good or bad credit rating
Self employed mortgages - no accounts or accountant
Buy to Let mortgages - or multiple property mortgages
Company directors mortgages or employees - who need enhanced income multiples
Poor credit mortgages - CCJs, defaults, slow payments, IVA, discharged bankrupts
Right to Buy mortgages - raising extra cash to buy, or cover rent arrears



383 Northolt Road
South Harrow
Middlesex
HA2 8JD

TEL: 0208 864 7788
FAX: 0208 423 7788

**WWW.WILSONESTATE.CO.UK**

Wilson Financial Services Ltd is authorised and regulated by the Financial Services Authority

RS PRINTERS

கண்கவரும் வண்ணங்களில் விதம்விதமான அழைப்பிதழ்கள்
பலகாரப் பெட்டிகள் அரங்கேற்ற மலர்கள் நினைவு மலர்கள்
நீங்கள் வியக்கும் வண்ணம் அலங்காரஅச்சுப் பதிப்பு செய்திட
வாருங்கள் உங்களள் எண்ணம்போல் எடுத்துச் செல்லுங்கள்



Graphic Design
Wedding Cards
Business Cards
Inuitation Cards
Rubber Stamp
Foil Printing

Letterheads
Inuoices
Brochures
Plastic Bags
Cake Boxes
Baloon Printing

Tel: 020 8904 6326
Fax: 020 8904 4524
Mobile: 077 6522 4337

www.rsprinters.com
rsprintersltd@aol.com
info@rsprinters.com

RS Printers Ltd
34 Court Parade
East Lane, Wembley
Middlesex, HA0 3HS

# எமது நன்றிகள்


எமது அழைப்பை ஏற்று பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்த வைத்திய கலாநிதி திருமதி. சீதாலச்சுமி முருகேஸ்வரனுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் கௌரவ விருந்தினராக தாயகத்திலிருந்து வருகை தந்து சிறப்பித்த முன்னாள் உப அதிபர் க. பத்மகாந்தன் அவர்களுக்கும் இதயபூர்வமான நன்றிகள்.

அடுத்து எமது நிகழ்ச்சிக்கு வாழ்த்துச் செய்திகள் அனுப்பிய அதிபர், உபஅதிபர், பழைய மாணவர் சங்க செயலாளர், சா/டிறிபேக் கல்லூரி அதிபர், கொ/ இராமநாதன் மகளிர் கல்லூரி அதிபர், சா/ மகளிர் கல்லூரி இலண்டன் பழைய மாணவர் சங்க காப்பாளர், எமது சங்க காப்பாளர் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகள்.

எமது விழா மலருக்கு கவிதைகள், கட்டுரைகள், கல்லூரியின் கடந்த கால வரலாற்று விபரங்களை தந்துதவியவர்களுக்கும் இந்த மலரை வெளியிடுவதற்கு உந்து சக்தியாக விளங்கும் அனைத்து விளம்பர தாரர்களுக்கும் எமது நன்றிகள்.

மேலும் இன்றய நிகழ்ச்சிகளில் பங்குபற்றிய அனைத்து கலைஞர்கள், ஒளி, ஒலி அமைப்பு செய்த Kenton Sounds உரிமையாளருக்கும் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கிய சிவராம், மகிந்தா கிருஷ்ணமூர்த்தி ஆகியோருக்கும் இம்மலரை குறுகிய கால அவகாசத்தில் சிறந்த முறையில் அச்சிட்டு உதவிய RS Printers நிர்வாகத்தினருக்கும் இறுதியாக இன்றைய நிகழ்ச்சிக்கு வருகை தந்து சிறப்பித்த பழைய மாணவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் நண்பர்கள், நலன் விலும்பிகளுக்கும் மற்றும் இந் நிகழ்ச்சியை சிறப்புற நடாத்த ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் சங்கத்தின் சார்பில் நன்றியை தெரிவித்து கொள்கின்றோம்.

**நிர்வாக சபையினர்**



WHITE FIRE
DIAMOND JEWELLERS

# White Fire வைரநகைகளுடன்
# ஸ்ரீ ஐஸ்வர்யா Embroidery புடவைகள்

ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு இங்கிலாந்தில் முதல் முறையாக நம்ப முடியாத விலையில் உயர் தரமான வைரம் பதித்த பிளாற்றினம், தங்கம் மற்றும் வெள்ளி தங்க நகைகளுடன் திருமணத்திற்கு வேண்டிய முகூர்த்தப் புடவைகள், காஞ்சிபுரம், சில்க் காட்டன், பாலிக் காட்டன், காட்டன் புடவைகள், வேட்டி முதலியவற்றை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம் ஈழத்தமிழர்களின் முதல் ஸ்தாபனம்

## WHITE FIRE வைர மாளிகை

என்றென்றும் வைரம் எல்லோருக்கும் வைரம் ஆனால் பெண்களுக்கோ **EXCLUSIVE EMBROIDERY** புடவைகள். உங்கள் திருப்திக்கு ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்.



We are proud to be the U.K.'s first Srilankan establishment to introduce exclusive selections of inspirational and outstanding quality of Indian & Western diamond jewellery to go along with embroidery saris and any garments.

White Fire diamonds are of first grade quality with DEF colour and IF, VVS1 clarity - our diamonds are sold with certificates. When White Fire diamonds are studded in PLATINUM, jewellery is a treasure. To reveal the truth why not visit our showroom. Your visit to our showroom would be more precious than diamonds.

## WHITE FIRE UK LTD

#63, VICTORIA ROAD, RUISLIP MANOR,
MIDDX, HA4 9BH.
PH: 01895 636462 / 0778 0975142 (M)
RUISLIP MANOR (METROPOLITAN/PICCADILLY) STATION
இல் இருந்து 10 METER தொலைவில

# ALPINE

Residential and Commercial property consultants

028 200 0000
www.alpinegroup.co.uk

245 Edgware Road
London NW9 6LU



**SALES** from **1/2% + VAT**
(All Over London)

**LETTINGS** from **5% + VAT**
(All Over North West London)

**COMMERCIAL** from **1% + VAT**
(All Over United Kingdom)



**Residential Mortgages**
**Clean Credit** UPTO **95% LTV**
**Bad Credit** UPTO **90% LTV**
**Broker Fees** FROM **£1000**




**Business Loans**
**Leasehold** UPTO **60% LTV**
**Freehold** UPTO **90% LTV**
**NO BROKER FEES**
**(CONDITIONS APPLY)**

**Your home is at risk if you do not keep up repayments on a mortgage or other loans secured upon it**